**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2024**

-------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான

வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருக்காமை**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1.21 இன் பிரகாரம் பாதீட்டு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைகளுக்கும் இடையே ஒப்பீடு ஒன்றைக் காண்பிக்கின்ற மேலதிக நிதிக் கூற்று ஒன்று அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தொகைக்கு தனியான நிரல் ஒன்று காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்து வரும் ஆண்டில் இருந்து பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ள படியான தொகைக்கும் இடையிலான ஒப்பீட்டை காண்பிக்கின்ற பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனியான நிரல் ஒன்றை தயாரிப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2.56 இன் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூறுகள் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் நிதியத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ள அந்த விடயங்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட விடயங்களுடன் ஒப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்து வரும் ஆண்டில் இருந்து காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூறுகள் வெளிப்படுத்தப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ள விடயங்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கை இடப்பட்ட விடயங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3.51 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிகளுக்குரிய தவறுகள், தவறுகள் கண்டறிப்பட்ட காலப் பகுதியில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் சரி செய்ய முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 343,380 செலுத்தப்பட்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டில் மிகை அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய காலப் பகுதியின் தவறு ஒன்று, தவறு கண்டறியப்பட்ட காலப் பகுதியில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் சரி செய்யப்படாமல் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக உரித்து காப்புறுதி நிதியத்தினால் செலுத்த வேண்டிய வருமான வரி பொறுப்புக்கள் ரூபா 24,179,923 ஆக இருந்ததுடன் அதில் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 15,868,955 ஆன வருமான வரிக்காக எந்த ஒரு ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டிற்குரிய வருமான வரிப் பொறுப்புக்கள் ரூபா 8,910,968 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது ரூபா 3,363,777 செலுத்தப்பட்டிருந்த போதும் ரூபா 5,547,191 ஆன நிலுவை வருமான வரிப் பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அதன் பிரகாரம் வருமான வரிக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளாமையின் அடிப்படையில் பொருண்மையான தவறு ஒன்று எழுந்திருந்த போதிலும் அதனைச் சரி செய்வதற்கு தேவையான சீராக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய வருமானம் வரி பொறுப்பான ரூபா 20,816,146 இல் திரண்ட நிதியத்தின் மீதி அதிகரித்தும், அத்திகதியில் நடைமுறைப் பொறுப்பு மீதி அப் பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் 4 ஆவது காலாண்டின் போது வரித் தொகையில் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் வரி விடுதலை செய்வதற்கு அனுப்ப வேண்டியிருந்தது என பணிப்பாளர் சபையினால் முன்மொழியப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய வரித் தொகை செலுத்துவதற்காக அங்கீகாரம் பெறப்படும் வரை கொடுப்பனவு செய்தல் மற்றும் வரி செலுத்துவதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து வரி செலுத்துவதற்காக வரி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல், வரி செலுத்துதல் மற்றும் அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாகக் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காசேட்டின் பிரகாரம் உரித்து வருமானம் ரூபா 110,423,190 மற்றும் உரித்து பதிவாளர்களினால் | மாதத்தின் இறுதித் திகதியின் வருமானம் அடுத்து வரும் மாதத்தின் ஆரம்பத் திகதியில் | வருமானங்களை சரியாக உரிய திகதியில் |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்படுகின்ற இரண்டு வார அறிக்கையின் பிரகாரம் உரித்து வருமானம் ரூபா 110,039,825 ஆகும். அதன் பிரகாரம் இனங்காணப்படாத உரித்து வருமானம் ரூபா 580,820 ஆகும். மேலும் குறித்துரைத்த காலப் பகுதியில் வங்கியில் இடப்படாத உரித்து வருமானம் ரூபா 283,065 ஆகும். | வங்கியில் இட்டதன் காரணமாக ஏற்படுகின்ற வேறுபாடு, சில சந்தரப்பங்களின் போது தவறின் காரணமாக பபதிவாளர் நாயகத்தின் ஏனைய கணக்குகள் செலவு வைக்க வேண்டிய தொகை உரித்து பதிவாளர் நாயகத்தின் கணக்கில் செலவு வைத்தல், உரித்து பதிவாளர் நாயகத்தின் கணக்கில் செலவு வைக்க வேண்டிய தொகை ஏனைய கணக்குகளில் செலவு வைக்கப்பட்டமை மற்றும் ஏனைய இனங்காண முடியாத நிதி செலவிடல்களின் வேறுபாட்டிற்கு காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறிக்கையிடல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் திறைசேரிப் பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 67,388 இனால் அதிகரித்து கணிப்பீடு செய்தலைத் திருத்துதல் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தில் சீராக்கப்படாமல் 2024 ஆம் ஆண்டில் உரித்து வருமானம் குறைக்கப்பட்டு 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 193,211,590 ஆன திரண்ட நிதிய மீதி நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 67,388 இனால் அதிகரித்தும் மீளாய்வாண்டின் மிகை அப் பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இரட்டைப் பதிவுகளின் தவறு சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டிய இடங்கள் இனங்காணப்படாமையால் இவ்வாறான வழுக்கள் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்களைப் பதிவு செய்தல் (காப்புறுதி நிதியம்) கட்டளை இலக்கம் 42(உ) | உரித்து பதிவாளர் நாயகத்தால் உரித்து வருமானம் தொடர்பாக 02 வாரங்களுக்கு ஒரு தடவை பிரதான அலுவலகத்திற்கு வழங்கப்படுகின்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் உரித்துக்கள் பதிவு செய்யும் வருமானம் | இரண்டு வார அறிக்கை பிரதான அலுவலகத்திற்கு பெறுவதில் தாமதம் ஏற்படுகின்றமையால் வங்கியில் இடப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் காசேடு தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் உரிய திகதியில் சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் உரித்துப் பதிவாளர்களினால் நாளாந்தம் வங்கிக்கு இடப்படுகின்ற பணத்தின் பெறுமதியின் அடிப்படையில் வருமானம் கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதியத்தின் மொத்த பெறுவனவுகளின் பெறுதியின் சரியாக தன்மையை உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நிதிப்பிரமாணம் 177(1) | கிடைக்கின்ற சகல காசும் தினந்தோறும் அல்லது இயலுமானவரை கூடிய விரைவில் வங்கியில் வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக காசு வங்கியிலிடல் 01 நாள் முதல் 06 நாட்கள் வரையிலான காலத்திற்கு இடையே கையில் வைத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | சேகரிக்கப்படுகின்ற சகல வருமானமும் நாளாந்தம் கணக்கீடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் காசினை வங்கியில் இட்ட பின்னர் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக கிடைக்கின்ற வருமானம் அடுத்த தினம் வங்கியில் இடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 68,649,636 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 54,885,560 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,764,076 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு உரித்துக்களைப் பதிவு செய்யும் வருமானம் ரூபா 8,788,192 இனால் அதிகரித்தமை, முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 9,398,361 இனால் அதிகரித்தமை மற்றும் ரூபா 3,363,777 வருமான வரி செலுத்துதல் என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்கள் பதிவு செய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை 42(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் சில உரித்து அலுவலகங்களினால் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட உரித்து வருமானம் தொடர்பான அறிக்கை “ஆர்.ஜீ.ரீ/ஐ.எப் 03” படிவத்திற்கு இணங்காதிருந்துடன் அதன் காரணமாக உரிய அலுவலகத்தால் அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஒரே வகையான | உரித்து வருமானங்கள் சரியான படிவத்திற்கு இணங்க வழங்குமாறு உரித்து பதிவு செய்தல் அலுவலகத்திற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது | தொடர்புடைய கட்டளைக்கு இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிவம் ஒன்று பின்பற்றப்படாமல் இருந்தமையால் அவற்றை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. | என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மேற்கூறப்பட்ட கட்டளை இலக்கம் 42(ஆ) இன் பிரகாரம் பிரதான அலுவலகத்திற்கு உரித்து பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கிடைக்கின்ற அறிக்கைகளை உள்ளடக்குவதற்கு படிவ இலக்கம் "ஆர்.ஜீ.ரீ/ஐ.எப் 02" இன் பிரகாரம் பதிவு ஒன்றை பாராமரிக்க வேண்டியிருந்த போதும் அந்த பதிவுக்கு உரிய படிவத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான படிவத்தின் பிரகாரம் (ஆர்.ஜீ.ரீ/ஐ.எப் 02) பதிசேட்டை பராமரித்து அதன் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய கட்டளைக்கு இணங்குதல் வேண்டும். |
| (இ) | உரித்து பதிவு செய்யும் அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட வருமானத்தை தாமதமின்றி வங்கியில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திணைக்களம் மாதாந்த வருமான அறிக்கை மற்றும் உரித்துக்களை பதிவு செய்யும் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரண்டு வார அறிக்கை ஒன்றுக்கொன்று சமமின்மைக்கான சந்தர்ப்பம் காணப்பட்டது. | இதற்கு முன்னரும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை தாமதம் இன்றி வங்கியில் இடுமாறு உரித்து பதிவு செய்யும் அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை தாமதம் இன்றி வங்கியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துக்கள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் காணிகளின் உரித்தைப் பதிவு செய்யும் போது உரித்து தொடர்பாக பிழையான தீர்மானம் எடுத்ததன் காரணமாக தரப்பினருக்கு ஏற்படுகின்ற நட்டத்திற்காக அரசாங்கத்தால் இழப்பீடு கையளித்தல் நிதியத்தை ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை எந்தவொரு இழப்பீட்டுக் கோரிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையும் பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினருக்காக இழப்பீடு கையளிப்பதற்கு நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் பரிந்துரைக்கப்படாது இருந்தமையால் உரித்துக் காப்புறுதி நிதியத்தின் மூலம் எந்த ஒரு இழப்பீட்டு நட்டமும் செலுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு தெரிவித்து நிதியத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |